Y.M.G.A


Registered as a News Paper    பக்கங்கள் 08    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 07    (20-01-1993)    புதன்கிழமை    ஓசை 337


## அஞ்சலிக் கூட்டத்திற்கு போக்குவரத்து ஏற்பாடுகள்

இன்று நெல்லியடியில் ஆரம்பமாகும் தளபதி கிட்டு உட்பட பத்து மாவீரர்களின் அஞ்சலி ஊர்வலத்திலும் கண்டன பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ள உள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. யாழ். சிற்றூர்திச் சங்கம் இதற்கென 200 மினி பஸ்களை சேவையிலீடுபடுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. பொதுமக்கள் அண்மையிலுள்ள பிரதான பாதை பஸ்தரிப்பு நிலையங்களில் இருந்து இலவசமாக இம் மினிபஸ்களில் பயணம் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களையாவும் தத்தமது வாகனங்களில் [7-ம் பக்கம் பார்க்க]

# இன்று மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி

# தீருவிலில் நினைவுக்கல் நாட்டும் நிகழ்ச்சி

## மறைந்த வீரருக்கு அணிவகுப்பு மரியாதை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவிற்கும் மற்றும் ஒன்பது போராளிகளுக்கும் மரியாதை செலுத்தவெனப் பிரகடனப் படுத்தப்பட்ட துக்கதினங்களின் இறுதி நாளான இன்று மாபெரும் எழுச்சிப் பேரணியும், இவர்களின் நினைவாக தீருவிலில் நினைவுக்கல் நாட்டும் நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்ச்சிகளின் போது மறைந்த தளபதியையும் மற்றையோரையும் கௌரவிக்கும் முகமாக அணிவகுப்பு மரியாதையும் இடம் பெறவுள்ளது. இதைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் இடம்பெறும் அதில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலர் உரையாற்ற உள்ளனர்.

நயவஞ்சக இந்திய தேசத்தின் நாசகாரச்சதி வலையில் சிக்கி தமிழீழத்தின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து விடுதலைப்புலிப் போராளிகள் வீரச்சாவடைந்ததையொட்டி இன்று தமிழீழமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மேற்படி பத்துப் போராளிகளையும் மரணப்பொறிக்குள் தள்ளிய இந்திய அரசின் நாசகாரச் சதிச்செயலைக் கண்டிக்கும் முகமாகவும், இந்திய அரசின் மேற்படி காட்டுமிராண்டித்தனமான நயவஞ்சகச் செயலைச் சர்வதேசத்துக்கும் அம்பலப்படுத்தும் முகமாகவும் இஃஹர்த்தால் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

### இந்திய அரசின் நடவடிக்கை

அத்துடன் இன்றையதினம் இந்திய தேசத்தின் மேற்படி இழி செயலைக் கண்டிக்கும் முகமாக மாபெரும் கண்டனப் பேரணியும், பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளன.

இன்றையதினம் அனைத்து அரச, தனியார்துறை அலுவலகங்கள், பாடசாலைகள், கல்விக்கூடங்கள், கடைகள், சந்தைகள் போன்ற அனைத்தும் மூடப்பட்டிருக்கும். அத்தியாவசியசேவைகள் தவிர்ந்த ஏனைய பொதுச்சேவைகளும் நிறுத்தப்பட்டிருக்கும். சகல அலுவலகங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். தமிழீழத்தின் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப் பட்டிருக்கும். மக்கள் கறுப்புப் பட்டிகள் அணிந்து தமது துக்கத்தையும், கண்டனத்தையும் வெளிக்காட்டுவர். வீதிகள், சந்திகள், போக்குவரத்து நிலையங்களில் சோககீதம் ஒலிபரப்பப் படும்.

வீரச்சாவடைந்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளது உருவப்படங் (8 ஆம் பக்கம் பார்க்க)



## தர்மத்திற்கு மாத்திரமல்ல சட்டத்திற்கும் முரணானது

### - இந்திய தூதுவருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

"உங்களது அரசாங்கம் தற்பொழுது எமக்கு எதிராக-தமிழ் மக்களது போராட்டத்திற்கு எதிராகச் செய்துவரும் துரோகத்தனம் இந்தியதர்மத்திற்கு எதிரானது மாத்திரமல்ல எந்தவிதமான சர்வதேச சட்டங்களுக்கும் அப்பாற்பட்

கப்பட்ட கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தளபதி கிட்டுவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் மரணத்திற்கு காரணமாக அமைந்த இந்தியாவின் செயலைக் கண்டிக்க இவ்

மைகளின் பெரும்பான்மையோரைக் கொண்ட சிங்கள அரசால் மறுக்கப்பட்டு தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரசைகள் என்ற தரத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது

## முல்லையில் மின்வேக அதிரடி

## 5 படையினர் பலி; மூவர் காயம்

வீரச்சாவடைந்தமையை ட்டி இன்று தமிழீழமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மேற்படி பத்துப் போராளி டித்தனமான நயவஞ்சகச் செயலைச் சர்வதேசத்துக்கும் அம்பலப்படுத்தும் முகமாகவும் இச் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஒன்றும் நடைபெறவுள்ளன.

இன்றையதினம் அனைத்து அரச, தனியார்துறை அலுவலகங்கள், பாடசாலைகள், கல்விக்கூடங்கள், கடைகள், சந்தைகள் போன்ற அனைத்தும் மூடப்பட்டிருக்கும். அத்

தமிழீழத்தின் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருக்கும். மக்கள் கறுப்புப் பட்டிகள் அணிந்து தமது துக்கத்தையும், கண்டனத்தையும் வெளிக்காட்டுவர். வீதிகள், சந்திகள், கோந்திர நிலையங்களில் சோககீதம் ஒலிபரப்பப்படும்.

வீரச்சாவடைந்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளது உருவப்படங்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## இந்திய அரசின் நடவடிக்கை

# தர்மத்திற்கு மாத்திரமல்ல சட்டத்திற்கும் முரணானது

## - இந்திய தூதுவருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

"உங்களது அரசாங்கம் தற்பொழுது எமக்கு எதிராக-தமிழ் மக்களது போராட்டத்திற்கு எதிராகச் செய்துவரும் துரோகத்தனம் இந்தியதர்மத்திற்கு எதிரானது மாத்திரமல்ல எந்தவிதமான சர்வதேச சட்டங்களுக்கும் அப்பாற்பட்டது"

இவ்வாறு யாழ். மாவட்ட அரச செயலகத்தின் பல்வேறு தரத்திலுமுள்ள உத்தியோகத்தர்களால் கொழும்பு இந்திய உயர் ஸ்தானிகர் ஊடாக இந்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தளபதி கிட்டுவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் மரணத்திற்கு காரணமாக அமைந்த இந்தியாவின் செயலைக் கண்டித்து இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்;

இலங்கை சுதந்திரம் அடைந்த 1948-ம் ஆண்டில் இருந்து சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிரான அடிப்படை உரிமைகள் பெரும்பான்மையோரைக் கொண்ட சிங்கள அரசால் மறுக்கப்பட்டு தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரசைகள் என்ற தரத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது தாங்கள் அறியாதவிடயமல்ல.

இவ்வடக்கு முறையை எதிர்த்து தமிழ் மக்கள் கடந்த காலங்களில் நடாத்திய சாத்வீகப் போராட்டங்களுக்கு எதிராக சிங்கள இனவாத அரசினால் திட்டமிட்டு கட்ட

( 7 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய பிரதமர் ராவின் 50 கொடும்பாவி எரிப்பு

## ஜெயலலிதாவின் கொடும்பாவியும் தகனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் மூத்ததளபதி கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகளது வீரச்சாவுக்கு காரணமாக இருந்த இந்திய தேசத்தின் வஞ்சகச்செயலுக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக குடாநாட்டின் பலபகுதிகளிலும் நேற்று கொடும்பாவி கொளுத்தும் நிகழ்வுகளும் கண்டனப்பேரணிகளும் பரவலாக இடம்பெற்றன.

இந்தியப் பிரதமர் நயவஞ்சக நரசிம்மராவ், தமிழினத துரோகி தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரது கொடும்பாவிகள் பல இடங்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கொளுத்தப்பட்டன.

( 7 ஆம் பக்கம் பார்க்க )



# முல்லையில் மின்வேக அதிரடி 5 படையினர் பலி; மூவர் காயம்

## 3 காவலரண்கள் தகர்ப்பு

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு கோட்டத்தில் சிங்கள குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று காவலரண்களை நேற்று முன்தினம் இரவு அழித்தனர். இத்தாக்குதலின் விடுதலைப் புலிகள் தாக்கி போது ஐந்து படையினர் பலியாகினர், மூவர் படுகாயமடைந்தனர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுத

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு கோட்டத்தில் நேற்று முன்தினமிரவு சிறிலங்கா காவலரண்கள் மீதான தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி | — 01 |
| ★ | ரி 56- 1 ரக துப்பாக்கி | — 02 |
| ★ | ரி 56- புதியரக துப்பாக்கி | — 01 |
| ★ | ரி 81- 1 ரக துப்பாக்கி | — 01 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி ரம் மகசின் | — 05 |
| ★ | ஏ கே. எல். எம் ஜி லிங் | — 500 |
| ★ | ரி 56 மகசின் | — 12 |
| ★ | ரி 81 மகசின் | — 04 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 3336 |
| ★ | ஜே. ஆர் கைக் குண்டு | — 06 |
| ★ | சிறிய கிளைமோர் | — 02 |
| ★ | ஏ கே. லோஞ்சர் | — 09 |
| ★ | கிளைமோர் வெடிக்கவைக்கும் கருவி | — 01 |
| ★ | வயர் ரோல் | — 01 |
| ★ | ரெயின் கோட் | — 11 |
| ★ | இராணுவ பட்டி | — 03 |
| ★ | தலைக் கவசம் | — 05 |
| ★ | தொப்பி | — 05 |
| ★ | ரெக்சின் | — 01 |
| ★ | கமரா | — 01 |
| ★ | தண்ணீர் கான் | — 03 |
| ★ | மிலிறி இட்பாக் | — 05 |
| ★ | சிவில் இட்பாக் | — 05 |
| ★ | சப்பாத்து (சோடி) | — 07 |

## தேசியக்கொடி இறக்கம்

இந்தியச் சதியில்சிக்கி வங்கக்கடலில், காவியமான பத்து வேங்கைகளுக்கும் துக்க தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, அரைக்கம்பத்தில்பறக்கவிடப்பட்டிருக்கும் தேசியக் கொடிகள் இன்று மாலை 6 மணியுடன் இறக்கப்படும்.

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை நாளை வியாழக்


( 8 ஆம் பக்கம் பார்க்க )

# இந்திய தேசியக்கொடி தமிழீழ மக்களால் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் மூத்த தளபதி கேணல் கிட்டு உடபட பத்து விடுதலைப் போராளிகளது வீரச்சாவுக்கு காரணமாகவிருந்த நயவஞ்சக இந்திய அரசின் நாசகாரச் செயலைக் கண்டித்து இந்தியாவின் தேசியக்கொடி யாழ். நகரில் எரியூட்டப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பல பகுதிகளில் இருந்தும் இந்தியத் தலைவர்களது கொடும்பாவிகளை இழுத்து வந்த மக்கள் இந்தியாவின் தேசியக் கொடியையும் தம்முடன் எடுத்து வந்தனர். இவ்வாறு வந்தடைந்த மக்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னால் வைத்து இழுத்து வந்த கொடும்பாவிகளை எரியூட்டுவதற்கு முன்னர் முதல்வேலையாக தாம் எடுத்துவந்த இந்தியாவின் தேசியக் கொடியை தீ மூட்டிக் கொளுத்தினர். இதன் பின்னரே இந்தியத் தலைவர்களது கொடும்பாவிகள் தீ மூட்டி எரியூட்டப்பட்டன. (க)



1986 இல் சென்னையில் தமிழக அரசிற்கு எதிராக தலைவர் பிரபாகரன் உண்ணாவிரதம் மேற்கொண்ட போது அதற்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்ட சன வெள்ளத்தினையும், அதில் தளபதி கிட்டு உரையாற்றுவதையும் காணலாம்.

> இந்த சைனைட் எங்கள் கழுத்தில் தொங்கும் வரை உலகின் எந்த சக்திக்கும் நாங்கள் அஞ்சமாட்டோம்.
>
> – தளபதி.கிட்டு

## வரி விளம்பரம்

**கடிகாரமா ? ரேடியோவா ?**

உங்கள் கடிகாரங்கள், ரேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். [சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு] தரமான கடிகாரங்கள், ரேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டிக்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, [வானவில் கூல்பார் அருகாமையில்] யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. [சி-5795]

## இன்று 'குமாரி' வரும்

[யாழ்ப்பாணம்]

குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் "குமாரி" கப்பல் இன்று மாலை பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இக்கப்பல் நேற்று மாலை கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டுள்ளதாகவும், இக்கப்பலில் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகரும் புறப்பட்டு வருவதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தின் 1993-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர். சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் கு. தவராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இருபத்தி மூன்று உறுப்பினர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். (86)

★

கைதடி நாவற்குழி தெற்கு சிறீ மகாவிஷ்ணு சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக திரு செ சிவராசாவும். செயலாளராக பா. தவராசாவும் இங்கு தெரிவாகினர்

★

நீர்வேலி சிறீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்தின் புதிய உத்தியோகத்தர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக ப. கரனும், செயலாளராக க. சிறி

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் அனைத்துப் பீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டமொன்று நாளை காலை 11-00 மணியளவில் கைலாசபதிகலையரங்கில் நடாத்தப்படவுள்ளது.

இக் கூட்டத்திற்கு அனைவரையும் சமுகமளிக்கும்படி யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

# தமிழர் தாயகத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

## -பிரேமதாசா

(டில்லி)

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்காத வரையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற பேச்சுக்கு இடமில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பீகார் மாநிலம் புத்தகாயாவில் புத்த பெருமான் பரிநிர்வாணம் அடைந்த வச்சிராசனத்திற்கு தங்க விதானமும் பொன்வேலியும் அமைக்கப் பட்டிருப்பதை திரைநீக்கம் செய்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரேமதாசா மேலும் கூறுகையில்: விடுதலைப் புலிகள் கோருவது போன்று தமிழர்களுக்கென தாயகத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

முன்னதாக திரை நீக்கம் செய்த நிகழ்ச்சியில் பேசிய போது பிரேமதாசா 1988-ம் ஆண்டில் புத்தகாய விற்கு விஜயம் செய்த போது ஜே.வி.பி. யின் வன்செயல் ஒழிய வேண்டும் என்றுதான் பிரார்த்தித்ததாகவும் இப்போது வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரார்த்தித்து இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## நன்கொடை

கிளாலி சம்பவத்தில் உயிர் நீத்தவரும் சரஸ்வதி பேக்கரி உரிமையாளருமான சதாசிவம் பாலசுப்பிரமணியத்தின் குடும்பத்தினருக்கு, யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் 50 000 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

## கேணல் கிட்டு அண்ணாவிற்கும் ஏனைய ஒன்பது போராளிகளுக்கும்

# எமது கண்ணீர் அஞ்சலி

## அர்ப்பணம்



இலட்சியத்தை கைப்பிடித்திருப்பதால்
இதயத்தில் உங்களை சுமக்கிறோம்.

மாவீரன் ஹீரோராஜ்
குடும்பத்தினர்,
சுதன் குடும்பம்

மல்லாகம்,

## வீர வணக்கம்



கடலில் வீரச்சாவைத் தழுவிககொண்ட

**தளபதி கிட்டு**

அவர்களுக்கும் ஏனைய வேங்கைகளுக்கும்
எமது வீர அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**பளை வர்த்தக சங்கம்**

(சி-4036

# நினைவு கூருகின்றோம்..

## 1993-01-20

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம் - கரவெட்டிப் பகுதியில் துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருக்கையில் சிறிலங்காக் காவற்றுறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

ராஜ்மோகன் [சிவராமலிங்கம் ராஜ்மோகன் - ராஜ்மோகன் வீதி, துமபளை பருத்தித்துறை - யாழ்ப்பாணம்)

1986ஆம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவதினரால் சுடுக் கொல்லப்பட்ட சாம்பல் தீவைச் சேர்ந்த இளைஞன், உப்புவெளி, அலைத் தோட்டத்தைச் சேர்ந்த மற்றொருவர் ஆகிய 2தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சத்திரச்சந்தியில் வைத்து தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட

ராஜன் (குலசேகரம்பிள்ளை புவிராஜசிங்கம் - 562, கடற்கரை வீதி, பாஷையூர் - யாழ்ப்பாணம்)

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட அதே இடத்தைச் சேர்ந்த 6 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், மணியந்தோட்டம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கணேஷ் (அழகரத்தினம் சத்தியேந்திரா - அம்பனை சுன்னாகம் மேற்கு - யாழ்ப்பாணம்)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாவடிவேம்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட- மூன்று மாதக் குழந்தை உட்பட 10 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு - காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5821)

# வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் வேங்கை வெற்றித் தோள்கள்

எம் நெஞ்சங்களில்
நின்று நிலவும்

மண்டபத்தில் கு. தவராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இருபத்தி மூன்று உறுப்பினர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். (86)

★

கைதடி நாவற்குழி தெற்கு சிறீ மாவிஷ்ணு சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக திரு செ சிவராசாவும். செயலாளராக பா. தவராசாவும் இங்கு தெரிவாகினர்

★

நீர்வேலி சிறீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்தின் புதிய உத்தியோகத்தர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக ப. கரனும். செயலாளராக க. சிறிஸ்கந்தராசாவும், பொருளாளராக பொ. சரவணபவானந்தமும் தெரிவாகினர். மேலும் ஐவரைக் கொண்ட நிர்வாக சபையுடன் உபதலைவர், உப செயலாளர் பத்திராதிபர் போன்றோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

எங்கள்

## இதய அஞ்சலி

வங்கக் கடலைச் சிவக்கச் செய்து தங்கள் உயிர் துறந்த வேங்கைகளுக்கும்

தங்கத் தளபதி

கேணல்

**கிட்டுவுக்கும்**

எங்கள் வீரவணக்கமும்

**அஞ்சலியும்**



யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களம், யாழ். கோட்டக்கல்வி அலுவலகம் உட்பட சகல ஊழியர்களும், உத்தியோகத்தர்களும்.

[4107]

---




இலட்சியத்தை கைப்பிடித்திருப்பதால் இதயத்தில் உங்களை சுமக்கிறோம்.

மாவீரன் ஹீரோராஜ் குடும்பததினர்,
சுதன் குடும்பம்

மல்லாகம்,
யாழ்ப்பாணம். (4042)

---

# வீர வணக்கம்



## தளபதி கிட்டுமாமா
## (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அவர்களுக்கும் அவருடன் வீரமரணத்தை தழுவிக் கொண்ட ஒன்பது வீரவேங்கைகளுக்கும் வடமராட்சி வடக்கு, மேற்கு தனியார் பேருந்து இயக்குனர் சங்கம் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறது.

வடமராட்சி வடக்கு, மேற்கு
தனியார் பேருந்து இயக்குனர்
சங்கம் 751, யாழ்ப்பாணம் வீதி,
வல்வெட்டித்துறை.

(சி-5826)

---

(சி-4036

(சி/5821)

---

# வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் வேங்கை வெற்றித் தோள்கள்

எம் நெஞ்சங்களில்
நின்று நிலவும்



தமிழினத்தின்
மூத்த தளபதி

# கேணல் கிட்டு

அவர்களுக்கும்

அவரோடிணைந்த ஏனைய ஒன்பது போராளிகளுக்கும்

## வீரவணக்கங்கள்

இந்திரா நகையகம்
181, கஸ்தூரியார் வீதி

நித்யா நகைமாளிகை
177C, கஸ்தூரியார் வீதி

தீபா நகையகம்
177A, கஸ்தூரியார் வீதி


ஜெயச்சித்ரா நகைமாளிகை
177D, கஸ்தூரியார் வீதி

அருணா ஆபரண மாளிகை
177B, கஸ்தூரியார் வீதி

ஈஸ்வரி நகைமாடம்
177, கஸ்தூரியார் வீதி

(சி/5829)

# விழி நீரால் அஞ்சலிகள்



பாரதமே நீ செய்த பாதகத்தால் - எம்
பாசமிகும் தளபதியை சாகடித்தாய்
கூரடைந்து போகும் எம் போராட்டம் - இதனால்
குறைவடைந்து போகாது நீயுணரு.

செம்மனமே! எதிர்ப்படையை நடுங்கவைத்த
பைந்தமிழே - நல்ல
இன் மனமே! எங்களது உடன் வளர்ந்த நல்லுயிரே
இனியெங்கே நம் விழிக்கு ஆறுதல்கள் - அந்த
விழியிங்கே கொல்கிறது வீறுதல்கள்.

பஞ்சசீலம் ஆக்கி வைத்த பாரதமே - உனது
நஞ்சுக்கோலம் அம்பலம் இப் பாரினிலே
அடிமை வாழ்வை எதிர்த்த காந்தி பிறந்த மண்ணே -
எம்மை
அடிமையாக்கத் தானா கொன்றாய் எமதண்ணலை.

நியதி என்றோ விதியிதென்றோ சொல்லமாட்டோம் -
இங்கு
நிம்மதியோ ஆறுதலோ அடைய மாட்டோம்
எதிர்காலம் பதில் சொல்லும் இந்தியாவே - அப்போ
முனைந்திடுவோம் ஆறுதல்கள் அடைவதற்கு

முத்தான பத்து உயிர்கள் போனதையோ
முறைகெட்ட நெறிகெட்ட சதிகாரரால்
வித்தானீர் விடுதலையின் வேராகினீர்
விழி நீரால் அஞ்சலிகள் யாம் செய்கிறோம்.

**கலை வர்த்தகக் கல்லூரி**
யாழ்ப்பாணம்.

(சி-5824)

# கண்ணீர் அஞ்சலி

வங்காள விரிகுடா சர்வதேச கடற்பிராந்தியத்தில் இந்தியாவின் நாசகார நயவஞ்சகர்கள் விரித்த சதியை உலகுக்கு உணர்த்திட

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

**மூத்த தளபதி கேணல் கிட்டு**


அவர்களுக்கும் அவருடன் வீரகாவியம் படைத்த ஒன்பது வீரவேங்கைகளுக்கும்

**எமது கண்ணீர் அஞ்சலியை**
செலுத்துகின்றோம்.

வடமராட்சி வடக்கு
கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்பு ஒன்றியம்,
காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை.

(4044)

இந்திய அரசின் சதியால்
வங்கக் கடலில் காவியமாகிய
**மூத்த தளபதி கேணல்**
**கிட்டு அண்ணாவுக்கும்**
மற்றும் ஒன்பது மாவீரர்களுக்கும்



**எமது இதயஅஞ்சலியை**
**செலுத்துகிறோம்!**

பி. ஐ. பர்னாண்டோ,
542, ஆஸ்பத்திரி வீதி,
(யாழ். அரசினர் வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி-5825)

## வகுப்புக்கள் ஆரம்பம்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் "ஹாட்லி நிறுவனம் என்ற பெயரில் கல்லூரியை விட்டு விலகிய மாணவர்களின் நன்மை கருதி கணனி வகுப்புக்கள், ஆங்கில வகுப்புக்கள், படவரைஞர் வகுப்புக்கள் ஆகிய வகுப்புக்களை நடாத்தி வருகின்றது இவ்வகுப்புக்களில் கற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்கள் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் மன்ற இணைச் செயலாளர்களுடன் தொடர்புகொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது

## சமூகம் தரவும்

மறைந்த மாவீரர் தளபதி கேணல் திரு. கிட்டு அண்ணாவுக்கும் ஏனைய போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக இன்று நடைபெறவுள்ள ஊர்வலப் பவனியில் பங்கு பற்றும் முகமாக சலக அங்கத்தவர்களையும் அவர்களுடன் பணிபுரியும் தொழிலாளர்களையும் இன்று காலை 11.00 மணிக்கு தாவடிச் சந்தியிலுள்ள சங்கக் காரியாலயத்தில் ஒன்று கூடுமாறு வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம் கேட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலிகள்

**கேணல் கிட்டு மாமா**
உட்பட
**10 வீரவேங்கைகளுக்கும்**
எமது காணிக்கைகள்

சேரன் போக்குவரத்துச் சேவை
வடமராட்சி

(4048)

## கண்ணீர் அஞ்சலி


இந்தியாவின் நயவஞ்சகத்தனத்தால்
பலியான விடுதலைப் புலிகளின்
மூத்த தளபதி
**கேணல் கிட்டு**
அவர்களுக்கும் அவருடன் பலியான
ஏனைய ஒன்பது வேங்கைகளுக்கும்
எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

உதயபுரம்
கிராம மக்கள்

(4102)

லட்சோபலட்சம் மனங்களைக் கவர்ந்து லட்சியத்திற்காக
தம்மைத் தாமே அழித்த எமவர்க்கு எமது

# வீர அஞ்சலிகள்



ரகுராமன் நகை மாளிகை,
ரவி அன் ராஜ் புடவை மாளிகை



விழி நீரால் அஞ்சலிகள் யாம் செய்கிறோம்.

**கலை வர்த்தகக் கல்லூரி**

யாழ்ப்பாணம்.

(சி-5824)

எமது இதய அஞ்சலியை
செலுத்துகிறோம்!

பி. ஐ. பர்னாண்டோ,
542, ஆஸ்பத்திரி வீதி,
(யாழ். அரசினர் வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி-5825)



# கிட்டு அண்ணா!

## உன் பணியை நிறைவேற்றுவோம்!!

தமிழன்னையின் துயரோட்டிடத் திடம்கொண்டவா- உயிர்த்
தமிழ்த்த யகம் தனைமீட்டிடக் களம்கண்டவா!
துணியாதவுன் திறத்தோடுபல் களம் வென்றவா- தலை
பணியாதஎம் பகைவென்றுஎம் உளம்நின்றவா!!

கொடியோரது செயல்கொன்றிடக் "கிட்டு" ஆகினாய் - புலிக்
கொடியேந்தியே களமெங்கனும் "சிட்டு" ஆகினாய்!
கொடியோரது உயிர்துஞ்சிட "வெட்டி" ஆடினாய்- இந்திக்
கொடியோரது கரம்பட்டிடமை விட்டு ஏகினாய்!!

கிட்டுஅண்ணா! உன் அணியை முறுக்கேற்றுவோம்- அன்புக்
கிட்டுஅண்ணா! உன் பணியை நிறைவேற்றுவோம்!
கிட்டுஅண்ணா! உன் நினைவை நிதமபோற்றுவோம்- யாரும்
தட்டஎண்ணா உன் கனவை நிறைவேற்றுவோம்!!

(சி/5817)

**யாழ். மாவட்டச் சனசமூக நிலையங்கள்**



ரகுராமன் நகை மாளிகை,
ரவி அன் ராஜ் புடைவை மாளிகை

[4051]

மறைந்த மாவீரன்

# கேணல் கிட்டுவிற்கும்

சக போராளிகளுக்கும்

இதயத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் எமது

# செந்நீர் அஞ்சலி

குலத்தின் விளக்குகள் சாய்ந்ததம்மா
இறுதிப் பயணம் போனதம்மா - புலி
இறந்தும் நெஞ்சில் வாழுதம்மா
குருதி கடலில பாய்ந்ததம்மா - தமிழ்
குலத்தின் விளக்குகள் சாய்ந்ததம்மா.

புயலே மீண்டும் நீ வருவாய் - வரிப்
புலியாய் மண்ணில் உருப்பெறுவாய்
பயமே அறியாப் புலிப்படையில் - படைத்
தலைவன் ஆகியே பகைமுடிப்பாய்.

காவியத் தலைவா நீ எங்கே - உன்
கண்ணின் மணிகள் வாடுதிங்கே
சாவினைத் தழுவிய வீரர்களே - மீண்டும்
சமர்க்களம் ஆடவே வாருங்களே.


இந்திய அரசே ஏன் மறித்தாய் - எம்
இளம்புலி வீரரை ஏன் மறித்தாய்
சிந்திய குருதிகள் போதாதா? - எம்
செந்தமிழ் வாழக் கூடாதா?

தமிழீழத்திற்கு எதிரான துரோகத்தனத்தில்
தொடர்ந்து இமாலய சாதனை புரிந்த
**இந்தியா இன்று**
இச்சதியின் மூலம் துரோகத்தனத்தில்
"கின்னஸ்" சாதனை புரிந்துள்ளது.

[4029]

**- நண்பன் -**

# கண்ணீர் அஞ்சலி




எதிர் சேனைகள் சிதைத்த
இரும்புப்புலி நீ......
வெற்றிச் செய்திகள் குவித்த
பெரும்புலி நீ......
காவியமான தமிழ்த்தலைவன்
மனம்
நிறைந்திட விழித்திட்ட
விண்ணொளி நீ......

**வர்த்தகர்சங்கம்**
**பருத்தித்துறை**
(சி/ 5822)

தனியார் கல்வி நிறுவனங்களின்

# கண்ணீர் அஞ்சலிகள்



**வங்கக் கடலில்" காவியமான**

## மூத்த தளபதி கேணல் கிட்டு

**(சதாசிவம் கிருஷ்ணகுமார்)**

| | |
|---|---|
| லெப். கேணல் குட்டிசிறி | கப்டன் நாயகன் |
| மேஜர் வேலன் | கப்டன் றொசான் |
| கப்டன் குணசீலன் | லெப். அமுதன் |
| கப்டன் ஜீவா | லெப். தூயவன் |

லெப். நல்லவன்

ஆகிய வீர வேங்கைகளுக்கு தனியார் கல்வி நிறுவனங்களின் வீர வணக்கங்கள்.

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம்

(சி 5823)

**யாழ் மாவட்ட உள்ளூராட்சி**
**மன்றங்களின் ஊழியர்கள் அனைவருக்கும்**

இந்திய ஆக்கிரமிப்பாளனின் தொடரும் துரோக ஏட்டில் தொடரும் பதிவுகளாக - பலிகளாக - மாற்றான் படையிடம் உயிருடன் அகப்படக் கூடாதென்னும் மரபைக் காத்து நடுக்கடலில் சிதறிய படகில் உடல் சிதறி வீரமரணம் அடைந்த எங்கள் முன்னாள் யாழ். மாவட்டத் தளபதி கேணல் கிட்டு அவர்கள் உட்படப் பத்து வீரவேங்கைகளைக் கௌரவிக்கும் மாபெரும் நிகழ்ச்சியில் அனைவரும் அணி திரள்வோமாக;

தயவுசெய்து ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற ஊழியர்களும் தத்தமது பகுதி வட்டாரப் பணிமனையில் தவறாது 93-01-20 ம் திகதி காலை 10 மணிக்கு ஒன்று கூடும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம் அங்கிருந்து திருவில் மாவீரர் நினைவாலயத்துக்குச் செல்லுவதற்கானவாகன ஒழுங்குகள் வட்டாரப் பணிமனையினால் செய்துதரப்படும்.

இந்தியத் துரோகத்தை அகிலத்திற்கு அறிவிப்பதற்காக அனைவரும அணி திரள்வோம!

யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஊழியர் சங்கம். (சி5837)

**யாழ். மாவட்ட நகர சபைகள்**
**பிரதேச சபைகள் எல்லைக்குட்பட்ட**
**அனைத்துச்**
**சனசமூகநிலையங்களுக்கும்**

இந்திய ஆக்கிரமிப்பாளனின் துரோக ஏட்டில் தொடரும் பதிவுகளாக - பலியாக - நடுக்கடலில் அந்நியப் படையிடம் அகப்படக் கூடாதென்னும் மரபைக் காத்து உடல் சிதறி வீரமரணம் அடைந்த எங்கள் தளபதி கேணல் கிட்டு உட்படப் பத்து வீரமறவர்களையும் கௌரவிக்கும் நிகழ்ச்சியில் அணி திரள்வோமாக.

தயவுசெய்து ஒவ்வொரு சனசமூக நிலையமும் தங்கள் உறுப்பினர்களோடு தமது பகுதி வட்டாரக் காரியாலயத்தில் 93-01-20 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தவறாது ஒன்றுகூடும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். திருவில் மாவீரர் நினைவாலயத்திற்குச் செல்வதற்கு ஏற்ற வாகன ஒழுங்குகள் வட்டாரக் காரியாலயத்தினால் செய்து தரப்படும்.

அனைவரும் அணிதிரள்வோம் இந்தியத் துரோகத்தை அகிலத்துக்கு அறிவிப்போம்.

யாழ். மாவட்டச் சனசமூக
நிலையங்களின் சம்மேளனம்.

(சி-5836)

# கண்ணீர் அஞ்சலி



இந்திய அரசின் நாசவேலைக்கு அடிபணிய மறுத்து நடுக்கடலில்

பெருமபுலி நீ......
காவியமான தமிழ்த்தலைவன்
மனம்
நிறைந்திட விழித்திட்ட
விண்ணொளி நீ......

**வர்த்தகர்சங்கம்**
**பருத்தித்துறை**
(சி/ 5822)

| | |
|---|---|
| லெப். கேணல் குட்டிசிறி | கப்டன் நாயகன் |
| மேஜர் வேலன் | கப்டன் றொசான் |
| கப்டன் குணசீலன் | லெப், அமுதன் |
| கப்டன் ஜீவா | லெப். தூயவன் |

லெப். நல்லவன்

ஆகிய வீர வேங்கைகளுக்கு தனியார் கல்வி நிறுவனங்களின் வீர வணக்கங்கள்.


**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம்
(சி 5823)

யாழ். மாவட்டச் சனசமூக
நிலையங்களின் சம்மேளனம்.
(சி-5836)

இந்திய அரசின் நாசவேலைக்கு அடிபணிய மறுத்து நடுக்கடலில்
கப்பலைத் தகர்த்து வீரச் சாவைத் தழுவிக்கொண்ட
சரித்திர நாயகர்களுக்கு

# வீர அஞ்சலி

# மூத்த தளபதி கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)



## லெப். கேணல் குட்டிசிறி

| | |
|---|---|
| **மேஜர் வேலன்** | **கப்டன் நாயகன்** |
| **கப்டன் குணசீலன்** | **லெப். அமுதன்** |
| **கப்டன் ஜீவா** | **லெப். நல்லவன்** |
| **கப்டன் றொசான்** | **லெப். தூயவன்** |

பாராண்ட தமிழகனை நம் நாடாள வைத்திடவே
போராடி அமைதிகாண புதுத்திட்டம் கொண்டு வந்தான்
தாங்காது மனம்கொதித்தோ? தார்மீக நாடே நீ!
தங்கக் கிட்டுவினை தணல் கொதிக்க வேக்கிவிட்டாய்

— புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் —

**கைத்தொழில் வர்த்தகர் சங்கம்**
சாவகச்சேரி.
(4037)

# கண்ணீர் அஞ்சலி



வடமராட்சியின் வல்வை
தந்திட்ட தமிழ் மறவா
ஈழமண்ணில் சிங்கள படைதனை
நிலைசெட் செய்தாய்
வங்கக்கடலினில் வானரப்
படையையும் விரட்டி சாதனை
புரிந்திட்டாய்
உன் பிரிவால் தம்பியும் கலங்கி
விட்டான் அறிந்தாயோ

**இருஸ்ணா பாண்அகம்**
அரசடி, நல்லூர்.
(4038)

## இதய அஞ்சலி

குருநகர் தொடர்மாடி இராணுவமுகாமை
இரவும் பகலும் ஓயாது தாக்கி, முகாமை அகற்றி
எமக்கு ஆறுதல் அளித்த

தமிழீழ தவப்புதல்வன்
**தளபதி கிட்டுவுக்கு**

எமது இதயத்தின் அடியிலிருந்து ஊற்றெடுத்து
கண்களினால் வடியும் செந்நீரால்
அஞ்சலி செலுத்துகின்றோம்.

-யாழ். டேவிற் வீதி, மக்கள்

(4041)

## கண்ணீர் அஞ்சலி



விடுதலைப் புலிகளின் வீரத் தளபதியாம்
வேங்கைகளின் மூத்த உறுப்பினராம்
தானைத் தலைவரின் தம்பியரில் மூத்தவனாம்
தமிழீழ மண்ணுக்காய் தன்னுயிரை
தானமாய் ஈய்ந்திட்ட வேந்தனாம்
இந்திய நாசகார வெறிக்கு
இறுதிவரை பணிய மறுத்து
இன்னுயிரை இனத்துக் காக
ஈய்ந்து விட்ட நாயகனாம்

**தளபதி கேணல் கிட்டு** (சதாசிவம் கிருஷ்ணகுமார்)
அவர்களுக்கும் மற்றும்
லெப். கேணல் குட்டி சிறி
மேஜர் மலரவன் அல்லது வேலன்
கடற்புலி கப்டன் ஜீவா
கடற்புலி கப்டன் குணசீலன் அல்லது குணராஜ்
கடற்புலி கப்டன் றொசான்
கடற்புலி கப்டன் நாயகன்
கடற்புலி லெப்டினன்ட் தூயவன்
கடற்புலி லெப்டினன்ட் நல்லவன்
கடற்புலி லெப்டினன்ட் அமுதன்
ஆகிய வீர, வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கம்

சங்கானை ப. நோ. கூ. சங்கம்

(சி-5834)

## யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் வேண்டுகோள்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும், அங்கத்தவர்களும், இன்று 20-01-93 புதன் காலை 10.00 மணிக்கு தளபதி கேணல் கிட்டு உட்பட வீரச்சாவு எய்திய பத்துப் போராளிகளையும் அஞ்சலிப்பதற்கும், இந்தியாவின் இழிசெயலை கண்டிப்பதற்காகவும் நடாத்தப்படவிருக்கும் ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளும் பொருட்டு நல்லூர் கோவில் முன்றலுக்குத் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

டானியல் அன்ரனி
தலைவர்
யாழ். மாநகரசபை சனசமூக
நிலையங்களின் சமாசம்

(சி-5830)

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(நெல்லியடி)


மந்திகை அரசினர் வைத்தியசாலையின், வெளி நோயாளர் பிரிவில், போதியளவு டாக்டர்கள் கடமை புரிந்தும், பலவகையான முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக, ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

## அடையாள அட்டை ஏற்பாடு

(நெல்லியடி)

வடமராட்சி தனியார் சிற்றூர்தி சேவைச் சங்க சாரதிகள், நடத்துனர்கள், நேரக் கணிப்பாளருக்கான, தொழிலுக்குரிய அடையாள அட்டைகள், சிற்றூர்திசேவைப் பொறுப்பாளரினால் அண்மையில் வழங்கப்பட்டது.

## யாழ். வெலிங்டன் சந்தி வர்த்தகர்கள் செலுத்தும் இதய, கண்ணீர் அஞ்சலிகள்!



வங்கக்கடலில்
காவியமாகிய
மூத்த தளபதி
கேணல்
**கிட்டு மாமா**
அவர்கட்கும்
மற்றும்
ஆகுதியாகிய
ஒன்பது
மாவீரர் களுக்கும்
எமது இதயம்
வெதும்பிய
கண்ணீர்
அஞ்சலிகள்

| லிங்கம் கூல் பார் | மொறாயஸ் | விக்ரம் தையல்மாளிகை | வீ. ரி. |
|---|---|---|---|

ஈழத்தமிழரின் வாழ்வுக்காகத்
தம்வாழ்வை அர்ப்பணித்த
## தளபதி கிட்டுவும் தம்பியரும் எம்நினைவில் என்றென்றும் வாழ்வர்



கிட்டாதா வாழ்வென்று கதறியோர்க்கும்
கிட்டுமா வாழ்வென்று வினவியோர்க்கும்
கிட்டவே வருமென்று கூறிநின்றான்
கிட்டுமா (மா) என்ற செல்லப் பெயரான்
எட்டவே அவன் இன்று போய்விட்டாலும்
கிட்டுமே கிட்டும் அவன் சொன்ன வாழ்வு.

இவருடன் உயிர்நீத்த வேங்கைகளுக்கும்
**எமது கண்ணீர் அஞ்சலி**

நாதஸ்வர, தவில் கலைஞர்கள்,
தமிழீழம்.

(4047)

இந்திய வல்லாதிக்க வல்லூறுகளின்
சதிக்குப் பலியாகி
வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு

## எங்கள் வீரவணக்கம்

ஆர்ப்பரித்தெழுகின்ற அலைகடல் கப்பலைத்
தீப்பிடித்தெரிய வைத்தாயோ - தீயவனே !
வேற்பிடித்து விளையாடி வீரக்குரலெழுப்பும்
நாப்படைத்த எம்மவரைச் சாவடைய வைத்தாயே

பட்டுக்கெட்ட துட்டனே - எங்களுடன்
முட்டிமோதி மூச்சிரைக்க ஓடியவனே
கிட்டுவுடன் நாடுமீண்ட போராடும் கூட்டமதை
தொட்டுவிடலாமேன்றோ திட்டமது தீட்டி நின்றாய்
இந்திய அரசே !
குலையாது எம்முறுதி சளைக்காது எம்மனது
விலையேது எம்வீரம் நிலையாது உன் அரசு
உடையுமடா உன்நாடு - அதிலொருபகுதி வந்து
இணையுமடா...... எம்மோடு......

கடற்றொழிலாளர்கள்

இந்திய நாசகார வெறிக்கு
இறுதிவரை பணிய மறுத்து
இன்னுயிரை இனத்துக் காக
ஈய்ந்து விட்ட நாயகனாம்

தளபதி கேணல் கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்)
அவர்களுக்கும் மற்றும்
லெப். கேணல் குட்டி சிறி
மேஜர் மலரவன் அல்லது வேலன்
கடற்புலி கப்டன் ஜீவா
கடற்புலி கப்டன் குணசீலன் அல்லது குணராஜ்
கடற்புலி கப்டன் றொசான்
கடற்புலி கப்டன் நாயகன்
கடற்புலி லெப்டினன்ட் தூயவன்
கடற்புலி லெப்டினன்ட் நல்லவன்
கடற்புலி லெப்டினன்ட் அமுதன்
ஆகிய வீர, வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கம்


சங்கானை ப. நோ. கூ. சங்கம்

(சி-5834)

---

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர்களின்

## இதய அஞ்சலிகள்



நாசகார இந்தியாவின் திட்டமிட்ட சதியில்
வீரச்சாவைத் தழுவிய


## கேணல் கிட்டு மாமா
## (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அவர்களுக்கும்
மற்றும் ஒன்பது வீர மறவர்களுக்கும்
எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம்
இன்று (20-1-93) நடைபெறும் கண்டனப் பேரணியில்
வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர்
அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் வேண்டுகின்றோம்

வடமராட்சி சிகைஅலங்கரிப்பாளர் சங்கம்

(3413) கிளை 7

---



மற்றும்
ஆகுதியாகிய
ஒன்பது
மாவீரர்களுக்கும்
எமது இதயம்
வெதும்பிய
கண்ணீர்
அஞ்சலிகள்

| | | | |
|---|---|---|---|
| லிங்கம் கூல்பார் | மொறாயஸ் | விக்ரம் தையல்மாளிகை | வி. ரி. அன்சன்ஸ் |

| | | |
|---|---|---|
| யாழ். றிக்கோ சுவிற்ஸ் அன் கிறீம் ஹவுஸ் | செல்வா ஹாட்வெயார்ஸ் | றொபின் ஹாட்வெயர்ஸ் |

சி-5827)

---

# வீரமறவர்களுக்கு வீர அஞ்சலி

வங்கக் கடலில் வீரகாவியம் படைத்த
தங்கத் தலைவா, கிட்டு உன்னுடன்
மங்காப் புகழ் படைத்த ஏனைய வேங்கைகளுக்கும்
எங்கள் உளமுருகும் கண்ணீர் அஞ்சலிகள்.

நாலா திசைநாடு சென்றுமே நீங்கள்
நலிவுற்ற நம் தமிழர் உறுதுயர் தீர்க்கவே- போராடி
நனிவுறு ஈழக் கனவுடன் நமைநாடி வருகையிலே
நயவஞ்சச் சதியதனால் உமை நாமுமிழந்தோமே

இளைய தலைமுறை இழந்தது நாயகனை
ஈழ மக்களோ இழந்தனர் வித்தகனை
தாயக மண்ணோ தவிக்குது துயர் கடலில்
தமிழினம் முழுதுமே கலங்குது கண்ணீரில்



இன்று திருவிலில் நடைபெறும் அஞ்சலியில் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பொதுச்சபை உறுப்பினர், பணிப்பாளர், பணியாளர்
உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(சி-5833)

---

ஆர்ப்பரித்தெழுகின்ற அலைகடல் கப்பலைத்
தீப்பிடித்தெரிய வைத்தாயோ - தீயவனே!
வேற்பிடித்து விளையாடி வீரக்குரலெழுப்பும்
நாப்படைத்த எம்மவரைச் சாவடைய வைத்தாயோ

பட்டுக்கெட்ட துட்டனே - எங்களுடன்
முட்டிமோதி மூச்சிரைக்க ஓடியவனே
கிட்டுவுடன் நாடுமீண்ட போராடும் கூட்டமதை
தொட்டுவிடலாமேன்றோ திட்டமது தீட்டி நின்றாய்
இந்திய அரசே!
குலையாது எம்முறுதி சளைக்காது எம்மனது
விலையேது எம்வீரம் நிலையாது உன் அரசு
உடையுமடா உன்நாடு - அதிலொருபகுதி வந்து
இணையுமடா...... எம்மோடு......

கடற்றொழிலாளர்கள்
கிராமிய கடற்றொழிலாளர் சமூக
அபிவிருத்தி அமைப்பு
கைதடி தெற்கு, நாவற்குழி.

(4101)

---

# வீர வணக்கம்

மூத்த உறுப்பினரும் முன்னாள்
யாழ்.மாவட்டத் தளபதியும் ஆகிய

# கேணல் கிட்டு

[சதாசிவம் கிருஷ்ணகுமார்]
லெப். கேணல் குட்டிசிறி
மேஜர் வேலன்
கப்டன் ஜீவா
கப்டன் நாயகன்
கப்டன் குணசீலன்
கப்டன் றொசான்
லெப்டினன்ட் தூயவன்
லெப்டினன்ட் அமுதன்
லெப்டினன்ட் நல்லவன்

ஆகியோருக்கு எமது
## வீர வணக்கங்கள்

மின்சாரசபை ஊழியர்கள்
வடபிராந்தியம்

யாழ்ப்பாணம். [4046]

# வீரவணக்கம்

## கடலிலே காவியமான தானைத் தளபதிக்கும் ஏனைய வேங்கைகளுக்கும் எங்களது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

மக்கள் மன மேடையிலே
பாசத்தால் உயர்ந்தவனே!
திக்கெட்டும் பெயர் சொல்ல
திரண்ட படையணியின் நாயகனே!
சிங்களப் படையின் சுவடுகள் அழித்து
எங்கள் மண்ணில் உலாவந்ததளபதியே!
உன்னை எண்ணி நாமிங்கு
கண்ணீரைச் சொரிகின்றோம்.




**தளபதி கிட்டுவுக்கும்** அவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். கேணல் குட்டிசிறி, மேஜர் வேலன், கடற்புலி கப்டன் நாயகன், கடற்புலி கப்டன் ஜீவா, கடற்புலி லெப். தூயவன், கடற்புலி கப்டன் குணசீலன், கடற்புலி லெப். நல்லவன், கடற்புலி கப்டன் றொசான், கடற்புலி லெப். அமுதன் ஆகியோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

(4043)

நோயாளர் நலன்புரிச் சங்கம்
யாழ். போதனா மருத்துவமனை.

# காணிக்கையாக்குகிறோம்



பஞ்சசீலம் பேசும் வஞ்சகரால் - தம்பியர்

தழுவிக் கொண்ட லெப். கேணல் குட்டிசிறி, மேஜர் வேலன், கடற்புலி கப்டன் நாயகன், கடற்புலி கப்டன் ஜீவா, கடற்புலி லெப். தூயவன், கடற்புலி கப்டன் குணசீலன், கடற்புலி லெப். நல்லவன், கடற்புலி கப்டன் றொசான், கடற்புலி லெப். அமுதன் ஆகியோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.


(4043)

நோயாளர் நலன்புரிச் சங்கம்
யாழ். போதனா மருத்துவமனை.

# காணிக்கையாக்குகிறோம்

பஞ்சசீலம் பேசும் வஞ்சகரால் – தம்பியர்
ஒன்மருடன் உன் தங்கத்திருமேனி
செந்தழலில் வெந்ததுவே – எம்
நெஞ்சமெலாம் வெந்தணலாய் மாறிற்றே.

மக்கள் மனம் கவர் மாவீரர்களுக்கு
மாநகர் மக்களின் மனமுடைந்த
கண்ணீர் பூக்களை - காலமெலாம்
காணிக்கை யாக்கின்றோம்.



லெப். கேணல்
**குட்டிசிறி**

கடற்புலி கப்டன்
**குணசீலன்**

கடற்புலி கப்டன்
**றொசான்**

மேஜர்
**வேலன் / மலரவன்**

கடற்புலி கப்டன்
**நாயகன்**

கடற்புலி கப்டன்
**ஜீவா**

கடற்புலி லெப்டினன்ட்
**அமுதன்**

கடற்புலி லெப்டினன்ட்
**நல்லவன்**

கடற்புலி லெப்டினன்ட்
**தூயவன்**

(4045)

யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர்கள்

### சிந்தனைக்கு

எழுந்து நில், துணிவு கொள்; முழுப்பொறுப்பையும் உன் சொந்தத் தோள்களில் ஏற்றுக் கொள். உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை உணர்.

— சுவாமி விவேகானந்தர்.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண. 20-01-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2849 நிர்வாகபீடம் 2023
க பெ எண் - 05

## செய்ததையே சொன்னார் சொன்னதையே செய்தார்

"நாங்கள் சிறந்த போராளிகளே தவிர சிறந்த பேச்சாளர்களோ வாய்வீச்சாளர்களோ அல்ல. தமிழீழம் என்ற இலட்சியமே எங்கள் முடிந்த முடிவு. இதற்காகவே எம்மை நாம் அர்ப்பணித்துள்ளோம்."

"அவர்களிடம் அதிக ஆட்கள், சிறந்த உபகரணங்கள், அப்படி இப்படி என்றெல்லாம் உண்டுதான். ஆனால், எம்மிடம் ஆட்பலமும், வீரமும் உள்ளன. சாவிற்கு நாம் தயார். அவர்கள் சாக ஆயத்தமானவர்கள் அல்லர். வெளியே அவர்கள் புறப்பட்டு வருவதில்லை ஏன்? எம்மில் கடைசி மனிதன் உயிருடன் இருக்கும் வரை நாம் போர் புரிவோம்."

"எமது இயக்கத்தில் கட்டுப்பாடு உள்ளது. எமது மக்களின் விடுதலைக்காக நான் ஒரு போராளியாக இருந்து போராளியாக மரணிக்கவே விரும்புகிறேன்."

"உன்னத குறிக்கோளையிட்டு நான் பேசுவதில்லை. உன்னத குறிக்கோளை நான் அறியேன். செயலில் தான் எனது நம்பிக்கை எல்லாம் தங்கியுள்ளது."

இவை தளபதி கேணல் கிட்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பேசும்போதும், பத்திரிகைப் பேட்டிகளின் போதும் தெரிவித்தவை. ஆனால், இவை எவையும் தளபதி கிட்டுவின் வாய்வீச்சல்ல. இவற்றைத் தளபதி கிட்டு தனது உயரிய லட்சியங்களாகக் கொண்டிருந்தார். தனது வாழ்க்கையில் வாழ்ந்தும் காட்டினார்.

தளபதி கிட்டு போர்க்களத்தில் முன் நின்றார். அவர் பின்னே போராளிகள் சென்றார்களே ஒழிய போராளிகளின் பின் சென்றவரல்ல கிட்டு. அவ்வேளைகளில் எல்லாம் போராளிகளினாலும், அவரது அன்பிற்கினிய மக்களினாலும் கிட்டு எச்சரிக்கப்பட்டார். ஆனால், தளபதி கிட்டு தனது நடவடிக்கைகளை கைவிடவில்லை. அவர் ஒரு சஞ்சிகைப் பேட்டியில் தெரிவித்துள்ளது போன்று ஓர் இஸ்ரேலிய ஜெனரல் வழங்கிய அறி

# தமிழர் வரலாற்றில் முத்திரை பதித்த தளபதி கிட்டுவின் போர்ச் சாதனைகள்

ஈழம் பூத்த தளபதியான கேணல் கிட்டு 1979-ம் ஆண்டு புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டதில் இருந்து வரலாறு படைத்த போர் வெற்றிகள் பலவற்றில் பங்கு கொண்டும், தலைமை தாங்கி வழிநடத்தியும் உள்ளார். அவர் பங்கு கொண்ட முக்கியமான தாக்குதல்களை இங்கே தருகிறோம்.

1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் லெப். சேணல் பொன்னம்மான் தலைமையில் உமையாள் புரத்தில் இராணுவ வாகனங்கள் மீதான கண்ணிவெடித் தாக்குதலுடன் தமிழீழ விடுதலைக்கான தனது ஆயுதப் போராட்டத்தை தளபதி கிட்டு ஆரம்பித்தார். இதுவே இவர் பங்குபற்றிய முதலாவது தாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது.

1983 மே 18 ஆம் திகதி கந்தர்மடம் வாக்குச் சாவடி மீது லெப். சீலன் தலைமையில் நடைபெற்ற தாக்குதலில் பங்கேற்றார்.

1983 ஜூலை 23 ஆம் திகதி லெப்டினன்ட செல்லக்கிளி தலைமையிலான திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்த கேணல் கிட்டு 1985-ம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி சிறிலங்கா இராணுவ முற்றுகையின்போது நடைபெற்ற நேரடி மோதலில் கப்டன் பண்டிதர் வீரச்சாவடைந்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

1985 ஏப்பிரல் 10-ம் திகதி தளபதி கிட்டு தலைமை ஏற்று யாழ் நகரில் கோட்டையுடன் இணைந்த பொலிஸ் நிலையம் மீது வெற்றிகரமான தாக்குதலை மேற் கொண்டார். இத்தாக்குதலைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் யாழ். குடாநாடு முதல்முதலாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. திரு. கிட்டு தளபதியாகப் பொறுப்பேற்று நடத்திய தீவிர தாக்குதலை அடுத்து 1985-ம் ஆண்டு மே மாதத்தின் பின் இராணுவ ரோந்து நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப் பட்டன. இராணுவத்தினர் தமது முற்றுகையை கைவிட்டு பின்வாங்கி ஓட வைத்த முதல் வெற்றிகரத் தாக்குதல் தளபதி கிட்டுவால் நடாத்தப்பட்டது. 1985-ம் ஆண்டு டிசம்பர் 21-ம் திகதி சுதுமலையில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட பிரதான முகாமை நான்கு உலங்குவானூர்திகளில் வந்து தரையிறங்கி முற்றுகையிட முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை விரட்டியடித்ததே அத்தாக்குதலாகும்.

1986இல் யாழ். தொலைத்தொடர்பு நிலையம் மீதான தாக்குதலை தளபதி கிட்டு தலைமையேற்று நடத்தினார். 1986 ஜனவரியில் பலாலி முகாமிலிருந்து வெளியேறிய படையினர் வழி மறித்து விரட்டியடிக்கப்பட்டனர்.

1986 மே மாதத்தில் குடாநாட்டில் சகல முகாம்களில் இருந்தும் படையினர் முன்னேற முயன்ற போது நடந்த பல தாக்குதல்கள் தளபதி கிட்டுவால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

1986 நவம்பர் 12இல் வல்வையில் இராணுவ முகாம் அமைக்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

1987 இல் தேசவிரோதிகளின் சதியினால் ஒரு காலை இழந்து சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்த போது தமிழக பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். சிறையில் இருந்து தன்னையும் சக தோழர்களையும் விடுதலை செய்ய வேண்டும், அல்லது தமிழீழத்தில் தமது தோழர்களிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். இந்த வேளையில் தமிழீழ மண்ணிற்கு கொண்டு வரப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

1989இல் லண்டன் சென்று விடுதலைப் புலிகளின் 'சர்வதேச விவகாரங்களுக்கு' பொறுப்பேற்று தனது கடமையை மேற்கொண்டார்.

1991ஆம் ஆண்டு லண்டனில் இருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்ட போதும், தனது பணியில் அவர் சிறிதும் சளைக்காமல் தமிழீழ மக்களின் அவலங்களை வெளியுலகிற்கு எடுத்துக் கூறுவதில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். இந்தியப் படை எமது மண்ணில் புரிந்த அடாவடித் தனங்களையும், அட்டூழியங்களையும் நூல்கள் மூலம் சர்வதேச அரங்கிற்கு வெளிக்காட்டிய அவரது பணியைத் தமிழ் மக்கள் என்றும் மறந்துவிடவே முடியாது.

காலம் காலமாக இந்திய அரசு தமிழ் மக்களுக்கு பல வழிகளிலும் கொடுமைகளையே புரிந்து வருகிறது. இந்தியாவின் 'சதிச் செயல் பட்டியலில்' இன்று தமிழ் இனம் பாசம் மிக்க ஒரு தளபதியை, வரலாற்றுச் சிறப்பு மிக்க காவியநாயகனை இழந்து விட்டது. அதே வேளை இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் ஏன் சர்வதேச உலகிற்கும் கூட தமிழ் மக்கள் என்றுமே அடிபணிய மாட்டார்கள் என்ற உண்மையை கிட்டுவின் சாதனை இன்று தெளிவாக வெளிப்படுத்திவிட்டது

## எங்களின் உதயத்தில் ஓர் அஸ்தமனம்

என் தேசமே நீ இன்னும்
எத்தனை மாவீரர்களை பிரசவிக்கப் போகிறாய்
எரிமலை ஒன்று சரிந்தது.
புயலொன்று காற்றொடு கலந்தது
எங்களின் இதயத்தில் தீப் பிளம்புகள்
ஆழ் கடலிலே அவசரமாக வந்தவன்
அன்னியரின் சதிக் கஞ்சாமல் தன்
தோழர்களுடன் தன்னையும் அழித்தவன்
எங்களின் மூத்த தளபதியாம் கிட்டு
இவன் பூகம்பமாய் வெடிப்பான் பின்
புன்னகையால் அணைப்பான்
பாசத்துக்கும் பழக்கத்துக்கும் கட்டுப்படுவான்

கிட்டண்ணா
நீ வளர்த்து விட்ட வேங்கைகள் கூட்டத்தில்
உன்னை தேடிக் கொண்டிருக்கிறோம்
உன் சுவடுகளை மட்டும் இங்கு ஆழமாய்
பதிய விட்டு விட்டு சுவடுகள் தெரியாத
கடல் அலைக்குள்ளா மறைந்தாய்
எங்கள் உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓட
நீ மரணித்து விட்டாயா? அல்லது
சதிகாரர் உன்னை மௌனமாக்கி விட்டனரா.

சசிதரன்

## பட்டுநிலா எம்மை விட்டுப் பறந்துபோனதோ?

பட்டு நிலா எம்மை விட்டுப் பறந்து போனதோ

## கடல்சாற்றும் உம்வீரம் பாடுகிறது

எங்கள் தாயகம் அழுகின்றது - இந்திய
ஏதிலார் செயல் கண்டு கொதிக்கின்றது
மங்காத புகழ்கொண்ட மாவீரன் - கிட்டு
மாண்டதனால் தாயகமே அழுகிறது

அஞ்சாது போர்புரியும் எம்வீரர் - என்றும்
துஞ்சாது தானையிலே நின்ற வீரர்
வஞ்சகராம் இந்தியரின் சதி தனிலே
பஞ்சாகி நெருப்பினிலே எரிந்தீரோ!

கடல்காற்றும் உம்வீரம் பாடுகிறது - அது
கரைவந்து சோகத்தை தருகிறது
உடல்கூட காணாமல் எம் நெஞ்சம்
உருகி உருகியே அழுகிறது! அழுகிறது!

அரியாலையூர் கேந்திரன்.

## இனியாவது? பாரதமே!

பாரதமே
இனியாவது
'காந்தி'யின் பெயரை சொல்லாதே!
காந்தியை கொன்ற
'கோட்சே' தான் உன் பிரதிநிதி
இவனது பெயர்தான் உனக்குச் சொந்தம்
இனியாவது? பாரதமே!
வங்கமே!
எங்களது கிட்டண்ணா எங்கே?
தேசத் தலைவனின்
தானைத் தளபதி எங்கே?
எங்கள் மண்ணின்
குழந்தைகளின் மாமா எங்கே?

### இந்திய

இந்தியாவின் நயவஞ்சகச் செயல் காரணமாக தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரப்புலிகள் வீரச்சாவடைந்தமையால் இந்தியத் தலைவர்கள் மீதும் இந்திய அரசின் மீதும் கோபமும், வெறுப்பும் கொண்ட தமிழ் மக்கள் தமது உள்ளத்து உணர்வுகளுக்கும், மனக் குமுறல்களுக்கும் நேற்றும் மூன்றாவது நாளாக செயல்வடிவம் கொடுத்தனர். இச் செயல்வடிவமாகவே இக் கொடும்பாவி ஊர்வலங்களும் கொடும்பாவி எரிக்கும் நிகழ்வுகளும் நேற்று முழுவதும் முழுமூச்சுடன் நடைபெற்றன.

### தூக்குமேடை:-

குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் இந்தியத் தலைவர்களுக்கு தூக்குமேடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தூக்கு மேடைகளில் இந்தியப்பிரதமரதும், தமிழக முதல்வரதும் உருவங்கள் கழுத்தில் சுருக்கிடப்பட்டு கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. இவற்றுக்கருகில் இந்திய அரசுக்கெதிரான கோசங்கள் அடங்கிய அட்டைகள் கட்டப்பட்டிருந்தன.

### சுடுகாடு:-

யேன். செயலில் தான் எனது நம்பிக்கை எல்லாம் தங்கியுள்ளது.''

இவை தளபதி கேணல் கிட்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பேசும்போதும், பத்திரிகைப் பேட்டிகளின் போதும் தெரிவித்தவை. ஆனால், இவை எவையும் தளபதி கிட்டுவின் வாய்வீச்சல்ல. இவற்றைத் தளபதி கிட்டு தனது உயரிய லட்சியங்களாகக் கொண்டிருந்தார். தனது வாழ்க்கையில் வாழ்ந்தும் காட்டினார்.

தளபதி கிட்டு போர்க்களத்தில் முன் நின்றார். அவர் பின்னே போராளிகள் சென்றார்களே ஒழிய போராளிகளின் பின் சென்றவரல்ல கிட்டு. அவ்வேளைகளில் எல்லாம் போராளிகளினாலும், அவரது அன்பிற்கினிய மக்களினாலும் கிட்டு எச்சரிக்கப்பட்டார். ஆனால், தளபதி கிட்டு தனது நடவடிக்கைகளை கைவிடவில்லை. அவர் ஒரு சஞ்சிகைப் பேட்டியில் தெரிவித்துள்ளது போன்று ஓர் இஸ்ரேலிய ஜெனரல் வழங்கிய அறிவுரையை நடைமுறையில் பின்பற்றினாரென்பதே உண்மை அதாவது முன்னணியில் நின்றுகொண்டு போராளிகளை 'முன்னே வா' என்றும், 'துணைக்கு வா' என்றும் கிட்டு அழைத்தாரே ஒழிய பின்னே நின்று கொண்டு முன்போ என்று ஒருபோதும் போராளிகளுக்கு அவர் கட்டளையிடவில்லை.

இதேபோன்றே அவர்தான் வரித்துக்கொண்ட தனது லட்சியத்திலும் பூரண நம்பிக்கை கொண்டிருந்தார். 'தமிழீழம்' என்பது விவாதப்பொருள் அல்ல என்பதில் திரு. கிட்டு உறுதியாக இருந்தார். தமிழீழத்திற்காக எதையும் இழப்பதற்கும் கிட்டு தயாராகவே இருந்தார்.

இதுபோன்றே இயக்க விதிமுறைகளையும் தளபதி கிட்டு முழுமையாகக் கடைப்பிடித்தார். இதுவே அவரது இறுதித் தீர்மானமாகவும் இருந்தது. எதிரியுடன் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற இயக்க விதிக்கிணங்க தன்னுடன் இருந்த போராளிகளுடன் தனது உயிரை மாய்த்துக்கொண்டார். சுமார் நான்கு வருடங்களுக்கு மேலாக தாயக மண்ணில், இல்லாதபோதும் இயக்கவிதிக் கிணங்க தனது உயிரைத் தற்கொடை செய்து கொண்டார்.

அவர் தன்னுயிர் ஈர்க்க முடிவெடுத்தபோதும் தமிழ்மக்களின் பாதுகாப்பு பற்றியே சிந்தித்தார். கூடவிருந்த கப்பல் ஓட்டிகள் தம்முடன் மரிப்பதை அவர் விரும்பவில்லை. அன்று தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்ததுபோன்று தனது இறுதி முடிவின் போதும் தம்முடன் கூடவந்த கப்பல் ஓட்டிகளைப் பாதுகாப்பதாகவே விரும்பினார்.

தளபதி கிட்டுவின் இறுதிமுடிவும் அவர் குறிப்பிட்டது போன்றே இருந்தது. "எமது இயக்கத்தில் போட்டா போட்டி இருக்கலாம், அப்படி இருந்தாலும் கூட சௌகரியமான சீவியத்திற்காக அது இருக்கமுடியாது. மரண ஆபத்திற்கு ஓர் அறை கூவலாகவே இருக்கமுடியும்" அதாவது அவர் சௌகரியமான தனது வாழ்க்கையை தீர்மானிப்பதாக இருந்திருந்தால் மேற்கு ஐரோப்பாவிலேயே தங்கியிருக்கலாம். மரண அபாயம் நிறைந்த வங்கக்கடல் பயணத்தை செய்திருக்க முற்பட்டிருக்கமாட்டார். ஆனால், அவர் தனது ஆபத்தறிந்தும் பயணம் தொடர்ந்தார். தனது இலட்சியத்திற்காக உயிரை மாய்த்தார். பேச்சிற்கும், செயலுக்கும் இலக்கணமானார்.

தோழர்களுடன் தன்னையும் அழித்தவன்
எங்களின் மூத்த தளபதியாம் கிட்டு
இவன் பூகம்பமாய் வெடிப்பான் பின்
புன்னகையால் அணைப்பான்
பாசத்துக்கும் பழக்கத்துக்கும் கட்டுப்படுவான்

கிட்டண்ணா
நீ வளர்த்து விட்ட வேங்கைகள் கூட்டத்தில்
உன்னை தேடிக் கொண்டிருக்கிறோம்
உன் சுவடுகளை மட்டும் இங்கு ஆழமாய்
பதிய விட்டு விட்டு சுவடுகள் தெரியாத
கடல் அலைக்குள்ளா மறைந்தாய்
எங்கள் உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓட
நீ மரணித்து விட்டாயா? அல்லது
சதிகாரர் உன்னை மௌனமாக்கி விட்டனரா.

சசிதரன்

## பட்டுநிலா எம்மை விட்டுப் பறந்துபோனதோ?

பட்டு நிலா எம்மை விட்டுப் பறந்து போனதோ
பாவிகளின் சதி வலைக்குள் வீழ்ந்து போனதோ
கட்டு உடல் கடலோடு கரைந்து போனதோ
கலங்கியழும் ஈழமக்கள் எப்போ காண்பதோ
திட்டமிட்ட தாக்குதலும் எதிரி சிதறுகின்ற போர்த் திறனும்
கிட்டண்ணா உன் செயலில் கிடுகிடுக்கும் - நீயின்றி
வெட்டவெளி ஆனதுவோ எம்மிதயம் - உன்கதை
வெறி இந்தியனின் குழிபறிப்பில் மூழ்கினதோ
கொட்டுகின்ற கொடும்பனியும் கொடும் இரவும்
கூட உங்கள் லட்சியத்தைக் குறைக்கவில்லை
முட்டிவரும் கடல் அலையும் முழங்கும் இடி மின்னலும்
மூச்சிரைத்து ஓய்ந்து போச்சு
தொட்டுவிட தமிழீழ மண்ணை அள்ளி முத்தமிட
தொடர்ந்த எங்கள் கிட்டு அண்ணா - உனை
கெட்டகுடி இந்தியனோ கேவலமாய்க் கொன்றானே
திட்டங்கள் தீட்டிடுவோம் தீயவரைத் தீய்க்க

- ஆவூர்க்குமரன்

## களத்தினில்கேட்டிடும்முரசு

- புதுவை இரத்தினதுரை -

தளபதிகிட்டு, தலைவனின்குட்டிச் சிறியெனும்
தம்பியும் எங்கே?
மலரவன், ஜீவா, நாயகன், றொசான் என்றிடும்
வேங்கைகள் எங்கே?
புலிகுணசீலன், தூயவன், அமுதன், நல்லவன்
என்பவர் எங்கே?
போர்முகத்தேறி புயலெனவீசிப் பொங்கிய
வீரர்கள் எங்கே?

எங்கே எங்கே வேங்கைகள் எங்கே
இந்திய அரசே! பதில் சொல்லு - இவர்
சந்தனமேனி செந்தணல் ஆன
சங்கதி தெரியும் பதில் சொல்லு.

பொங்கிடும் கடலில் புலிமறவீரர்
போய்வரக்கூட முடியாதா? - நாம்
எந்தையர் கடலில் எழுந்திடக் கூட
இந்தியநாடு தடைதானா?

திலீபனைக் கொன்றாய் திருவில் வெளியில்
தீயினை மூட்டியும் நின்றாய் - இன்று
பலியெடுத்துந்தன் பற்களில் ரத்தப்
பாலினுக்காகவா கொன்றாய்?

தாயகம் நோக்கியே வீசிய புயல்களைத்
தடுத்தது இந்திய அரசு - இனிக்
காவிய நாயகன் காட்டிடும் பாதையில்
களத்தினில் கேட்டிடும் முரசு.

கடல்காற்றும் உம்வீரம் பாடுகிறது - அது
கரைவந்து சோகத்தை தருகிறது
உடல்கூட காணாமல் எம் நெஞ்சம்
உருகி உருகியே அழுகிறது! அழுகிறது!

அரியாலையூர் கேந்திரன்.

## இனியாவது? பாரதமே!

பாரதமே
இனியாவது
'காந்தி'யின் பெயரை சொல்லாதே!
காந்தியை கொன்ற
'கோட்சே' தான் உன் பிரதிநிதி
இவனது பெயர்தான் உனக்குச் சொந்தம்
இனியாவது? பாரதமே!
வங்கமே!
எங்களது கிட்டண்ணா எங்கே?
தேசத் தலைவனின்
தானைத் தளபதி எங்கே?
எங்கள் மண்ணின்
குழந்தைகளின் மாமா எங்கே?
நீ சொல்லமாட்டாய்!
எங்களுக்குத் தெரியும் - ஏனெனில்
உன்னையும் 'கோட்சே'யின் நாடு ஆளுவதால்

சுஜோ.

### தர்மத்திற்கு

விழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை எதிர்த்து இறுதியாகத் தமிழ் மக்கள் தமதுஉயிர், உடைமைகளைப் பாதுகாக்க சிங்கள இனவாதத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அப்பொழுது தமிழரின் போராட்டத்திற்கு உங்களது தார்மீக ஆதரவை எதிர்பார்த்தோம். இவ் எதிர்பார்ப்புபல அறிவாளிகளையும், தத்துவ மேதைகளையும், ஞானிகளையும், மதத்தையும், தந்த நாடு என்றதால் மாத்திரம் அல்ல. எம்மோடு மொழி, கலாசாரத் தொடர்புடைய நாடு என்ற அடிப்படையிலேயே. ஆனால் இந்திய அரசோ நாம் எதிர்பார்த்ததிலும் பார்க்கக் கூடிய அளவு எமது போராட்டத்திற்கு ஆதரவு தந்து உதவி புரிந்தது அதனால் நாம் எண்ணியிருந்தோம் எம்மீது கொண்ட பாசத்தால் என்று, ஆனால் கூடிய விரைவில் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டார்கள் உங்களின் உள்நோக்கத்தை. உங்கள் படையெடுப்பின் பின்னர், எமது மண்ணை ஆக்கிரமிக்கத் தொடங்கி எமது மக்களை, சொத்துக்களை அழித்து வெறியாடிய பொழுது தமிழ் மக்கள் கண்டு கொண்டனர் உங்களது சுயரூபத்தை. என்றாலும் படுதோல்வியோடு உங்கள் படை 1990 இல் திரும்பிய பொழுது மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

ஆனால், உங்களது அரசாங்கம் தற்போது எமக்கு எதிராக தமிழ் மக்களது போராட்டத்திற்கு எதிராகச் செய்து வரும் துரோகத்தனம் இந்திய தர்மத்திற்கு எதிரானதுமாத்திரமல்ல எந்த விதமான சர்வதேச சட்டங்களுக்கும் அப்பாற்பட்டது.

சென்ற வாரம் சர்வதேச கடல் பிராந்தியத்தில் தமிழ் போராளிகள் வந்த கப்பலை உங்கள் யுத்தக்கப்பல்கள் வழிமறித்து தடைசெய்ய எந்த நாட்டுச் சட்டம் இடம் கொடுத்தது? அக் கப்பலை வழிமறித்து அதிலிருந்த 10 போராளிகளை கைப்பற்ற முனைந்தது, இந்தியச் சட்டத்தின் கீழா அல்லது சர்வதேச சட்டத்தின் கீழா? இம்முறையும் உங்கள் முயற்சி பலிக்கவில்லை. அவர்கள் தாமாகவே மரணித்து விட்டார்கள். உங்கள் முகத்திரை அயோத்தியின் நடவடிக்கையின் பின்னர் திரும்பவும் சர்வதேச அரங்கில் கிழிபட்டு விட்டது. ஆனால் இந்திய அரசினது இத்தான்தோன்றித் தமான நடவடிக்கையால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே, இதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் இதுபோன்று எதிர்காலத்திலும் நடைபெறாதிருக்க வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு, இந்திய தர்மத்தைக் காப்பாற்றும்படியும் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அஞ்சலிக்

பணியாளர்களையும் பொது மக்களையும் ஏற்றிக் கொண்டு நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு பிற்பகல் 2.00 மணிக்கு சமுகம் தருமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

செயல்வடிவம் கொடுத்தனர். இச் செயல்வடிவமாகவே இக் கொடும்பாவி ஊர்வலங்களும் கொடும்பாவி எரிக்கும் நிகழ்வுகளும் நேற்றுமுழுவதும்முழுமூச்சுடன் நடைபெற்றன.

### தூக்குமேடை:-

குடாநாட்டின் வலிகாமம்; வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் இந்தியத் தலைவர்களுக்கு தூக்குமேடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தூக்கு மேடைகளில் இந்தியப்பிரதமரதும், தமிழக முதல்வரதும் உருவங்கள் கழுத்தில் சுருக்கிடப்பட்டு கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. இவற்றுக்கருகில் இந்திய அரசுக்கெதிரான கோசங்கள் அடங்கிய அட்டைகள் கட்டப்பட்டிருந்தன.

### சுடுகாடு:-

மேற்படி இரு இந்தியத் தலைவர்களதும் கொடும்பாவிகள் பல பகுதிகளிலும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பல பிரதான சந்திகளில் போடப்பட்டு தீ மூட்டி எரியூட்டப்பட்டன. இதனால் குடாநாட்டின் பல முக்கிய சந்திகள் சுடுகாடுபோல காட்சி கொடுத்தது. குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தின் முன்றல் நேற்று நள்ளிரவுவரை சுடுகாடாக இயங்கிக்கொண்டிருந்தது பல பகுதிகளில் இருந்தும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட கொடும்பாவிகள் இங்கேயே போட்டு எரியூட்டப்பட்டன. நேற்று மட்டும் இந்த இடத்தில் சுமார் 50 கொடும்பாவிகள் எரியூட்டப்பட்டன. இப்பகுதியிலிருந்து நேற்று முழுவதும் தீச்சுவாலையும் புகைமண்டலமும் எழுந்து கொண்டிருந்தது.

### மக்கள் திரண்டனர்:-

யாழ். மாவட்ட சிற்றூர்தி சங்கத்தினர் மாகியப்பிட்டி, தெல்லிப்பழை, அச்சுவேலி, மூளாய், சாவகச்சேரி நெல்லியடி ஆகிய பகுதிகளில் இருந்து யாழ். நகரை நோக்கி மாபெரும் கொடும்பாவி ஊர்வலங்களை நடாத்தினர். இந்திய அரசுக்கெதிராக கொதித்தெழுந்தமக்கள் இக் கொடும்பாவி ஊர்வலங்களில் அதிகளவில் திரண்டனர்.

மேற்படி பகுதிகளில் இருந்து நேற்றுக் காலை ஆரம்பமாகிய கொடும்பாவி ஊர்வலங்களில் இந்திய பிரதமரதும் தமிழக முதல்வரதும் கொடும்பாவிகள் பாடைகளில் வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. பறையொலிகள் முழங்கின. மொட்டையடித்த இருவர் கொள்ளிக் குடங்களை எடுத்துச் சென்றனர். ஒவ்வொரு சந்தியிலும் தரித்து நின்று ஒப்பாரி சொல்லி, மாரடித்து மேற்படி இந்தியத் தலைவர்கள் மரணமடைந்த

( 8 ஆம் பக்கம் பார்க்க )

ஈழநாதம்

## தளபதி கிட்டுவின் உருவப்படம் திரைநீக்கம்

[யாழ்ப்பாணம்]

மறைந்த தளபதி கேணல் கிட்டுவின் உருவப்படம் இன்று காலை 9.00 மணியளவில் கல்வியன் காட்டுச் சந்தியிலுள்ள மாவீரன் செல்லக்கிளி அம்மான் திருவுருவப் படத்திற்கு அருகில் திரைநீக்கம் செய்யப் படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வாலை அம்பன் சனசமூக நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

## பிரபாவின் கவிதை தாங்கி வெளிச்சம் வெளிவந்துள்ளது

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் எழுதிய 'நாம் அணிவகுத்துள்ளோம்' என்ற கவிதையும், மற்றும் கல்வயல் வே. குமாரசாமி, சோ. பத்மநாதன், வீ. பரந்தாமன் ஆகியவர்களின் கவிதைகளும் நா. யோகேந்திரநாதனின் 'தவம்'-ந. கிருஷ்ணசிங்கத்தின் 'வெல்லப்படவேண்டியதற்கான துயரங்கள் - செ பொ. சிவனேசுவின் 'வீரி' செம்பியன் செல்வனின் 'முதல் முட்டை' ஆகிய சிறுகதைகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் 'தமிழோசை' வீடியோப்பட விமரிசனத்தை கருப்பறவை எழுதியுள்ளார். இன்னும், அ. து. வை நாகராஜன், முள்ளியவளை நடா. ரங்கநாதன் ஆகியோரின் இரண்டு கட்டுரைகளும், வீதி நாடகம் பற்றி கே. வி. ராமசாமி எழுதிய கட்டுரையின் மறுபிரசுரமும், 'புதுநிலம்' பகுதியையும் தாங்கிய வெளிச்சம் வெளிவந்துள்ளது.

## கிட்டு வந்த கப்பலின் பணியாளர் மூவர் நீதிமன்றில்

இந்தியக் கடற்படையினரால் சர்வதேசக் கடல்எல்லையில் வைத்து வழிமடக்கி சென்னைக்கு இழுத்து வரப்படும் வழியில் கைது செய்யப்பட்ட 9 பேரில் மூவர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளின் கப்பலில் வந்தவர்கள் எனக்கருதப்படும் ஒன்பது பேரைக் இந்தியக் கடற்படையினர் கைதுசெய்து விசாகபட்டினம் அருகேயுள்ள இந்தியக் கடற்படைத்தளத்திற்கு கொண்டு சென்றமை தெரிந்ததே.

மேற்படி கப்பலின் பணியாளர்கள் எனக்கருதப்படும் இவ் ஒன்பது பேரில் மூவர் நேற்று முன்தினம் விசாகபட்டினத்தில் அமைந்துள்ள மாவட்ட விசேட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவரை மூன்று நாட்களுக்கு பொலிஸ் காவலிலும் மற்றைய இருவரையும் 14 நாட்களுக்கு நீதிமன்றக் காவலிலும் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## இன்று

களைத் தாங்கிய ஊர்தி இன்று பிற்பகல் 2.00 மணியளவில் நெல்லியடிச் சந்தியில் இருந்து புறப்படும். விடுதலைப் புலிகளின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் இவ் ஊர்தி வதிரிச் சந்தி, உடுப்பிட்டிச் சந்தி ஆகியவற்றினூடாக தீருவில் திடலைச் சென்றடையும். இவ்வூர்தியைப் பின்தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு செல்லும் மாபெரும் கண்டனப் பேரணியொன்றும் செல்லும்.

இப் பேரணி தீருவில் திடலைச் சென்றடைந்ததும் இவ் வீரர்களின் நினைவுக்கல் நடுகை இடம்பெறும். அதனையடுத்து மாலை 5.30 மணியளவில் மாபெரும் கண்டனக் கூட்டம் நடைபெறு .

இக் கண்டனப் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும்

## இந்திய

தாக உணர்த்தப்பட்டது. இக் கொடும்பாவிகளைப் பின் தொடர்ந்து சென்ற மக்கள் இந்திய அரசுக்கு எதிராக கோசம் எழுப்பிய வண்ணமாக சென்றனர். இவ்வாறாக அனைத்துப்பகுதிகளில் இருந்தும் யாழ். நகரை வந்தடைந்த கொடும்பாவி ஊர்வலங்கள் அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்குச் சென்று அவ்அலுவலக முன்றலில் கொடும்பாவிகள்போடப்பட்டு எரியூட்டப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு தென்மராட்சி கோட்டக் கலைஞர்களினதும், இலக்கியப் படைப்பாளிகளினதும் பேரணி ஒன்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகளை இழுத்துச் சென்றது. புத்தூர் சந்தியில் இருந்து ஆரம்பித்து சாவகச்சேரி பஸ்நிலையத்தை நோக்கிச் செல்லும் வழியில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு ஒவ்வொரு சந்தியிலும் ஒப்பாரி வைத்தனர். மாலை 6 50 மணியளவில் சாவகச்சேரி பஸ்நிலையத்தைச் சென்றடைந்ததும் சமய சம்பிரதாய முறைப்படி பொம்மைகளின் சிதைகள் தீமூட்டப்பட்டு எரிக்கப்பட்டன இந்நிகழ்வினைப் பெருந்திரளான மக்கள் பார்வையிட்டனர்.

இதேவேளை நேற்று நள்ளிரவும், நேற்று முன்தினமிர

## இந்திய அரசைக் கண்டித்து பொது அமைப்புகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சமாதானத் தூதுவராய் சர்வதேச கடலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் மரணத்திற்குப் பொறுப்பாக இருந்த இந்திய அரசைப் பல்வேறு பொது அமைப்புகளும் கண்டனம் செய்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

கிராமிய உழைப்பாளர் சங்கம் சிமெந்து. பொதுத் தொழிலாளர் யூனியன் யாழ்' பல்கலைக் கழக மாணவர், ஒன்றியம், யாழ். பல்கலைக் கழகமறுமலர்ச்சிக்கழகம், அகில இலங்கை வீரசைவ சங்கமே என்பன உட்பட பல்வேறு அமைப்புகள் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளன.

கலந்துகொள்ளும் மக்களின் வசதிகருதி குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. [க]

## கிளாலி

கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட நிதித்துறை வருவாய்த்துறைப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் தெரிவித்துள்ளார்.

## முல்லையில்


லைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

அரியகுள இராணுவ முகாமிற்கும், சமனங்குள இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள, சிங்களக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த. காவலரண்களே புலிகளின் இடீர் அதிரடித் தாக்குதல்களால் அழிக்கப்பட்டன. இரவு 10 55 மணியளவில் ஆரம்பித்த இவ் அதிரடித் தாக்குதல் நான்கு நிமிடங்கள் மட்டுமே நீடித்தது.

இத்தாக்குதலில் மூன்று இராணுவத்தினரும் இரண்டு ஊர்காவல் படையினரும் பலியாகினர் மூவர் காயமடைந்தனர். இதேவேளை சிங்களக் குடியேற்றங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களிலிருந்து மோட்டார் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலின் போது போராளிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# உனைக்காணத் துடித்தமனம் உருகுதையா மெழுகாக....





லெப்.கேணல் குட்டிசிறி

## மரண அறிவித்தல்

### இ. ச. பேரம்பலம்

[உரிமையாளர் இ. ச. பேரம்பலம் அன்கோ]


காரைநகர் வாரிவளவு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணம் செம்மாதெரு இலக்கம் 90-ல் வசித்தவருமாகிய இராமு சண்முகம் பேரம்பலம் [உரிமையாளர் இ ச பேரம்பலம் அன்கோ] 19-1-1993 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும் பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, நாகரத்தினம் (இ ச. பேரம்பலம் அன்கோ). அன்னபாக்கியம், காலஞ்சென்ற பானாமணி, கணேசலிங்கம் (இ.ச. பேரம்பலம் அன்கோ) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானசம்பந்தன், சதாசிவம், சோமசுந்தரம் (உரிமையாளர் யாழ் என்ரபிறைஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), தங்கமலர், சண்முகராசா (பங்காளர் அலங்கார் புடவை மாளிகை, நவீனசந்தை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகநாதன், சண்முகராசா, ஞானேஸ்வரி, சண்முகரட்ணம், சிவராசா, சிவகுமாரி, சிவரூபன், சிவகணேசன், நந்தினி, சாந்தகுமார், சிவகுமார், கஜேந்திரன், கஜமுகன், கமலநேசன், கமலநாதன், கமலரூபன், இராஜசுலோஜினி, கலைமகள், வாசுகி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்

மனைவி

4112)





**லெப்.கேணல் குட்டிசிறி**

தமிழ் தாயின் தவப்புதல்வா தளபதியே எப்கிட்டு
தமிழீழ நெஞ்சங்களில் நிலைத்திட்டாய் உயிர் விட்டு
தரங்கெட்ட பாரதத்தின் கொடும் பிடிக்கு ஆட்பட்டு,
உரங்கெட்டு வாழாது உயிர் விட்டாய் தீப்பட்டு

உலகமே உறுதியின் உறைவிடம் புலிகளென
உவமானங் காட்டவைக்கும் உவடமக்கு உரமூட்டி
நிலை கெட்ட நீசர்க்கு நீ பாடம் புகட்டிவிட்டாய்
மலையே நீ சாய்ந்ததனால் மனங்களெல்லாம் குமுறுதையா!

மறத்தமிழா! மாவீரா! மங்காத தளபதியே
சிறைப்பட்ட எம் வாழ்வை சீர்படுத்த வந்தவனே
கறைப்பட்டு நிற்கின்றார் கடைகெட்ட பாரதத்தார்
நிறைவாக்க உன் பணியை நாமிங்கு தயாரானோம்.

[ஆக்கம்; ஈழப்பிரியன்]


**ஸ்பெஷல் என்ஜினியர்ஸ்**
36, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

(சி/5828)


கோட்டக் கலைஞர்களினதும், இலக்கியப் படைப்பாளிகளினதும் பேரணி ஒன்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகளை இழுத்துச் சென்றது. புத்தூர் சந்தியில் இருந்து ஆரம்பித்து சாவகச்சேரி பஸ்நிலையத்தை நோக்கிச் செல்லும் வழியில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு ஒவ்வொரு சந்தியிலும் ஒப்பாரி வைத்தனர். மாலை 6 50 மணியளவில் சாவகச்சேரி பஸ்நிலையத்தைச் சென்றடைந்ததும் சமய சம்பிரதாய முறைப்படி பொம்மைகளின் சிதைகள் தீமூட்டப்பட்டு எரிக்கப்பட்டன இந்நிகழ்வினைப் பெருந்திரளான மக்கள் பார்வையிட்டனர்.

இதேவேளை நேற்று நள்ளிரவும், நேற்று முன்தினமிரவும் நள்ளிரவு வேளைகளில் குடாநாட்டில் பல பகுதிகளிலும் இந்தியப் பிரதமரும், தமிழக முதல்வரும் இறந்துவிட்டதை அறிவிக்கும் "இழவு" சொல்லும் ஒலிகள் கேட்டதாக பலர் தெரிவித்தனர்.

**பள்ளிமாணவர்களும் கண்டனப் பேரணி:**

குடாநாட்டின் பாடசாலை மாணவர்களும் நூற்றுக்கணக்கில் இரண்டு இந்திய அரசுக்கெதிரான கண்டனப் பேரணி ஒன்றை நேற்று நடாத்தினர். திருநெல்வேலியில் இருந்து ஆரம்பமாகிய இக் கண்டனப் பேரணியின் போது இந்தியத் தலைவர்களது கொடும்பாவிகள் எடுத்துச் செல்லப்பட்டன. இக் கொடும்பாவிகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தின் முன்னால் போடப்பட்டு எரியூட்டப்பட்டது (க)

அன்னோர் 19-1-1993 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும் பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, நாகரத்தினம் (இ.ச. பேரம்பலம் அன்கோ). அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலாமணி, கணேசலிங்கம் (இ.ச. பேரம்பலம் அன்கோ) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானசம்பந்தன், சதாசிவம், சோமசுந்தரம் (உரிமையாளர் யாழ் என்ரபிறைஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), தங்கமலர், சண்முகராசா (பங்காளர் அலங்காரி புடவை மாளிகை, நவீனசந்தை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகநாதன், சண்முகராசா, ஞானேஸ்வரி, சண்முகரட்ணம், சிவராசா, சிவகுமாரி, சிவறூபன், சிவகணேசன், நந்தினி, சாந்தகுமார், சிவகுமார், கிஜேந்திரன், கஜமுகன், கமலநேசன், கமலநாதன், கமலறூபன், இராஜசுலோஜினி, கலைமகள், வாசுகி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
மனைவி

4112)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**19-01-93**


எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8078

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

| | | | | |
|---|---|---|---|---|
| 42-2397, | 40-7583, | 26-9201, | 43-2524, | 24-4875, |
| 26-6526, | 27-6887, | 24-4367, | 41-2479, | 28-8589, |
| 26-0536, | 24-5967, | 24-6475 | 42-2432, | 24-8603, |
| 24-7044, | 41-5178, | 24-5707, | 26-514 | 24-8631, |
| 27-7419. | 27-9052, | 26-1583, | 27-5775, | 26-1735, |
| 42-2151, | 28-9927. | | | |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 24-8079, | 26-2786, | 42-266, | 24 4481, | 40-1188, |
| 24-5167, | 28-9037, | 41-8626 | 22-7271; | 27-9626, |
| 24-0416, | 24-9938, | 42-9220, | 28-9449 | |



# வங்கக் கடலில் வரலாறாய் ஆன வரிப்புலியே!
# தங்கத் தமிழீழம் கலங்குவதைப் பாராயோ!!

"தேசமும் ஓர்நாள் ஓய்ந்திடக்கூடும் தாகங்கள் ஓயாது
தலைமுறைவாழ தலைதருவோரைச் சரித்திரம் மறக்காது"

இந்தியச் சதியால் வங்கத்தில் வீரச்சாவைத் தழுவிய **தளபதி கேணல் கிட்டு** உட்பட பத்து வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறோம்,


**நியூ லலிதா ஜுவலர்ஸ்** ஸ்தாபனத்தினரும், ஊழியர்களும்
(சி 5832) 74/1, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.